## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின், இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) மற்றும் செயலாளர் (தொழிலாளர் நியாய சபை) பதவிகள்

பின்வரும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக இலங்கை நிர்வாக சேவையின் தரம் I யைச் சேர்ந்த தகுதி மற்றும் தகைமை வாய்ந்த அலுவலகர்களிடமிருந்து (விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 1ஆம் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு தகைமைவாய்ந்த அலுவலர்கள் உட்பட) கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு நியமனம் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 01 |
| 02 | செயலாளர் (தொழிலாளர் நியாய சபை) | 01 |

இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்கள் விண்ணப்பிக்காதபட்சத்தில் , 03 வருட முனைப்பானை மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், இப்பதவியில் முழுநேர அடிப்படையில் கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் சேவைக்கு அமர்த்தும் வகையில் நியமனம் செய்ய கவனம் செலுத்தப்படும்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள் 141 இன் படி கடமைகளை நிறைவேற்றுவதற்கு சேவைக்கு அமர்த்தும் நியமனங்களை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிப்பு பற்றி ஆராய்ந்து உச்சளவாக ஒரு வருட சேவைக் காலத்திற்கு மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இங்கு இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் படி முறையாக தயாரிக்கப்பட்ட அவர்களது கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய சுருக்க விபரத்தை (CV) திணைக்களத் தலைவரினூடாக செயலாளர், நீதி சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு 2023 ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் சமர்பிக்க வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள், பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்படாதுள்ள விண்ணப்பப்படிவங்கள் **அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.**

**2.0. விண்ணப்பதாரர்களது கல்வி மற்றும் தொழில்சார் தகைமையை பற்றிய சுருக்க விபரம் (CV)**

**2.1 அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள்;**

I. பொதுவான நிர்வாகத்தில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம்.

II. பொது நிர்வாகம், முகாமைத்துவம், பொதுக்கொள்கைகள், மனிதவள முகாமைத்துவம், சட்டம், செயல்திட்ட திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் , நிதி முகாமைத்துவம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய முதுகலைப் பட்டம் பெற்றிருத்தல்.

III. பொதுப் பெறுகை பற்றிய பயிற்சி மேலதிக தகைமையொன்றாக கவனத்திற்கொள்ளப்படும்.

IV. ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

2.2 சக்திகள்

I. தூரநோக்கு

II. மாற்றத்தின் முகவர்

III. மேம்பாட்டின் பங்கு

2.3 நடத்தைத் திறன்கள்

I. தலைமைத்துவம்

II. பரந்த அளவிலான ஆய்வுப் பார்வை

III. மாற்றத்திற்கு இணங்கியொழுக மற்றும் முன்னேற்றத்திற்கான நோக்குறிமை

3.0 தெரிவு செய்யப்படும் முறைமை

தகுதிவாய்ந்த விண்ணபதாரரொருவரை தெரிவு செய்தல், கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் சார் அனுபவங்கள் பற்றிய சுய விபரத்தை (CV) அடிப்படையாகக் கொண்டு முதுமை மற்றும் திறமை ஒழுங்கு வரிசையில் மதிப்பீடு செய்து, நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும் தகைமைவாய்ந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் சிலர் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகவுதிறனிற்காக அரசாங்க சேவை ஆணைக் குழுவின் 02/2022 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 6(ஆ) பிரிவிற்கு அவதானம் செலுத்தப்படும்.

தகைமைவாய்ந்த விண்ணப்பதாரியொருவரை தெரிவு செய்துகொள்வதானது நேர்முகப் பரீட்சையின் போது முதுமை மற்றும் திறமைசார் ஒழுங்குவரிசை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

3.1 புள்ளி வழங்கும் நடைமுறை

| தகவுதிறன்/ தலைப்பு | உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டு முறையியல் |
|---|---|---|
| சேவை முதுமை<br>கூடுதலான சேவை முதுமையைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு உச்சளவான புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன், ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு தமது சேவை முதுமையின் ஒழுங்கு வரிசைக்கு அமைய விகிதாசார அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். | 50 புள்ளிகள் | கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய சுருக்க விபரம் (CV) /நேர்முகப் பரீட்சை |

| | | |
|---|---|---|
| **பொதுவான நிர்வாகத்தில் உள்ள அனுபவம்**<br>துறையில்/விடயப் பரப்புசார் திசைமுகப்படுத்தலுக்கு இணங்கியொழுகுவது ஊடாக அளவு, பெறப்படும் அறிவு அல்லது நிபுணத்துவத்தின் வலிமை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். | 20 ** புள்ளிகள் வழங்கப்படும். | |
| **தொழில் தகைமை மற்றும் ஆராய்ச்சி**<br><br>**1) பொது நிர்வாகம், முகாமைத்துவம், பொதுக்கொள்கைகள், மனிதவள முகாமைத்துவம், சட்டம், செயல்திட்ட திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம நிதி முகாதைத்துவம் அல்லது தகவல் தொழில்நுட்பம் அல்லது பொதுபெறுகை பற்றிய முதுகலைப் பட்டம்/ தொழில்முறை தகைமை பெற்றிருத்தல்.**<br>அ. ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பட்டப் பின் படிப்பு– புள்ளி– 7<br>ஆ. வகுப்பறையில் கற்றலை அடிப்படையாகக் கொண்ட பட்டப் பின் படிப்பு–புள்ளி– 6<br>இ. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா – புள்ளி 4<br>ஈ. பட்டம்/பட்டப் பின் படிப்புச் சான்றிதழ்/தேசிய உயர் டிப்ளோமா சான்றிதழ் – புள்ளி– 3<br>உ. டிப்ளோமா – 2 புள்ளி<br><br>**2) பொது நிர்வாகம், முகாமைத்துவம், பொது பெறுகை தகவல் தொழில்நுட்பம் அல்லது அரச சேவையின் ஒழுக்க முகாமைத்துவம் போன்ற விடயத் துறையில் பயிற்சி**<br>அ. 3 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் புள்ளி – 1<br>ஆ. 10 தினங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் . புள்ளி - 0.5 | 10 புள்ளிகள் வழங்கப்படும். | |

| | | |
|---|---|---|
| **இ.** 3 தினங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம்<br>புள்ளி – 0. 2.<br>3) **ஆங்கில மொழிச்தேர்ச்சி** *<br><br>**அ.** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது அரச பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஆங்கிலமொழி பற்றிய டிப்ளோமா/IELTS பரீட்சையில் ஒட்டுமொத்த புள்ளிப் பெறுமதி 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL – IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL – CBT 213 அல்லது அதற்கு மேல், TOEFL – PBT அல்லது அதற்கு மேல், அல்லது ஆங்கிலமொழி மூலமான முதுகலைப் பட்டம் - புள்ளி– 02<br><br>**ஆ.** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது அரசபயிற்சி நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கிலமொழி பற்றிய சான்றிதழ் - புள்ளி– 01<br><br>*உச்சளவான தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும். | | |
| **சக்திகள்**<br>மேலே 2.2 பிரிவுக்கு அமைய, விண்ணப்பதாரியை ஊக்குவித்தலுக்கு உட்படுத்த வேண்டிய, பணிகளை விளைதிறன்மிக்கவாறு நிறைவேற்றுவதற்கு இருத்தல் வேண்டும். | 10 ** புள்ளிகள் | நேர்முகப் பரீட்சை |
| **நடத்தைசார் திறன்கள்**<br><br>மேலே 2.3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விளைதிறன்மிக்கவாறு மேற்கொள்ளத் தேவைப்படுத்தப்படக்கூடிய பணிகள் மற்றும் செயற்பாடுகள் | 10 புள்ளிகள் | நேர்முகப் பரீட்சை |

குறிப்பு 1: மேலே புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறையில் "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்" என்பதனால் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகம் கருதப்படும்.

குறிப்பு 2: மேலே புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பட்டப்பின் படிப்புத் தகைமைகளும்,

i. இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின்; (வேறு பட்டமளிப்பு நிறுவகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அவ்வாறான தகைமைகள் மேற்படி குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.) அல்லது

ii. அரச பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து அல்லது அரசாங்கத்தினால் சர்வதேச நிறுவனமொன்றின்; அல்லது

பெற்றிருத்தல் வேண்டும்.

**செயலாளர்**

நீதி சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

திகதி……………………..